விசேஷ விளம்பரத்திற்கு!

# இந்துசாதனம்

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்

விசேஷ விளம்பரத்திற்கு!

Registered as a Newspaper in Ceylon.
P. M. G. No. H. A. 59/300|of 1939.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே ஈச னெந்தை யிணையடி நீழலே.

விரோதி வருஷம் (1889) ஆவணிமாதம் 28-ம் திகதி ஆரம்பமானது.

[புத்தகம் ௫௩] யாழ்ப்பாணம்:— விஷு௵ தை௴ ௨௩ ௳ (1942 பிப்ரவரி 5 வியாழக்கிழமை) [இலக்கம் ௮௧]


## சிவசோதி இயல்


(புதூர்ச்சங்கம் பிரசங்கமணி, அ. இராஜம் பிள்ளையவர்கள்)


கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யென்று ஆன்றோர் வாக்கு. எல்லாரும் நீக்கமற நிறைந்துள்ள இறைவனுக்குக் கண்களாக விளங்குபவை மதிகதிரனல் என்று மூன்றுமாம். ஒருகால் உமையம்மையார் தம் நாயகன் இருகண்களையும் விளையாட்டாக மூடினர். மூடினதும் உலகெங்கணும் இருள்பரவிற்று. உயிர்களனைத்தும் துன்பக்கடலிற் றோய்ந்தன. நடக்கருணைப் பரமன் உயிர்கள்படுந் துன்பத்திற் காற்றாதவராய்த் தமது நுதற்கண்ணைத் திறந்தனர். திறந்ததும் உலகத்தைச் சூழ்ந்த இருள் பறந்தது; உயிர்களும் இன்புற்றன. இக்கதையால் கதிர்மதி அனலாகிய முச்சுடர்களும் ஆண்டவன் வல இட நுதல் விழிகளென்பதும், அவைகளின் ஒளியின்றி உலகம் இயங்கா தென்பதும் தெளிவாகின்றன.

"காயகன் கண்ணை யப்பால் காயகி
புதைப்ப வெங்கும்
பாயிருளாகி மூடப் பரிந்துல
கினுக்கு நெற்றித்
தூயகேத் திரத்தினாலே சுட
ரொளி கொடுத்த பண்பில்
தேயமா ரொளிக ளெல்லாஞ்
சிவனுருத் தேசதென்னுர்"

(சிவஞான சித்தியார்)

இனி ஐவகைப் பூதங்களுள் ஒன்றுபே கனல் மாத்திரம் சிறந்து விளங்கும் உண்மையைச் சிறிது ஆராய்வாம். சத்துசித்து ஆனந்தமாக விளங்கும் பரம்பொருட்குரிய மூர்த்தங்கள் எட்டாகும். அவை மண், புனல், கனல், காற்று, வெளி, கதிர், மதி, உயிர் என்பன.

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு
நிலாப் பகலோன்
புலனுய மைந்தனோ டெண்வகை
யாய்ப் புணர்ந்து நின்றுன்
உலகே ழெனத்திசை பத்தெ
னத்தா னொருவனுமே
பலவாகி நின்றவா தோணேக்க
மாடாமோ."

(திருவாசகம்)

இவ்வெட்டு மூர்த்தங்களும் அனல மாத்திரம் நான்கு மூர்த்தங்களாக மிளிர்கிறது. இப்பூதங்களுள் ஒன்றாய்த் திகழ்வதும் அனல். சூரிய சந்திரரும் அக்கினித் தொடர்புடையார். உயிரும் சிற்சத்தியாகலான அக்கினிக் கூறுடையதே. சந்திரனை நீர்மண்டலமென்றும், உயிர் சிற்சத்தி யொளிப்பொருளல்லவென்றும், கூறுநூல்களுமுள. இன்னணம் அனல் கடவுளுக்கு நான்கு மூர்த்தங்களாக இலங்கலான்,

"சோதியே சுடரே சூழொளி விளக்கே........" எனத் திருவாசகமும்,

"தேனுக்கு மினிமழலே
புமைக்கன் வண்செழும்பவளம்
தானேக்குந் திருமேனி தழலுரு
வாஞ் சங்கரனை......."

எனத் தேவாரமும்,

"இடர்கெடுத் தென்னை யாண்டு
கொண் டென்னு
ளிருட்பிழம் பறவெறிந் தெழுந்த
சுடர்மணி விளக்கி னுள்ளொளி
விளங்குந்
தூயநற் சோதியுட் சோதி..."
எனத் திருவிசைப்பாவும்,
"பேசாப் பெருமையிற் பேசசிறந்த
பேரொளி காண்
ஆசாபா சங்க ளணுகாத
பேரொளிகாண்..." எனப் பட்டினத்தடிகள் பாடலும்,

"அலகில் சோதிய னம்பலத் தாடுவான்........" எனப் பெரியபுராணமும் இறைவனை உருத்திராக்கினியெனவும், பரஞ்சுடரெனவும், சிவசோதியெனவும், விளிக்கின்றன. இன்னும் சிவபெருமான் தழல் வண்ணன் என்பதை விரக்

குஞ் சான்றுகள் பலவுள. அவை விரிக்கிற் பெருகும்.

இனிப் பூதாக்கினிக்கும் சிவபரஞ்சுடருக்குமுள்ள இயைபுகளைச் சிறிது விளக்குவாம். அக்கினி தன்னையடையும் பொருள்களின் மாசுக்கு அவைகளைத் தன்மயமாக்குவதுபோல் இறைவனும் தன்னையடையும் ஆன்மாக்களின் மலவிருளை அகற்றித் தன்மயமாக்குவன்.

"இத்தனைத் தெரிபாகி
வெப்பழற்றி விரதம்
என்னின ளெனன்மையும்போ
லெங்குமுள விறைவன்
வத்தினைசெய் தெவ்விடத்தும்
வழிபடவே யருளும்
மலமறப்போ ரான்மாவின்
மலரடி ஞானத்தாற்
சிந்தனைசெய் தருச்சிக்கிற்
சிவனுளத்தே தோன்றித்
தீயிரும்பைச் செய்வதுபோற்
சீவன் றன்னைப்
பந்தனையை யறுத்துத்தா
னாக்கித்தன் னுருவப்
பாப்பையெலாங் கொடுபுகுத்தி
பதிப்பவனின் பாலே."

(சிவஞானசித்தியார்)

அனல் அருவாகவும் உருவாகவும் ஒளிர்கின்றதுபோல ஆரனும் அருவாகவும் உருவாகவும் ஒளிர்கிறான். அனல் ஓலமைப்பற்றித் தன் விளக்கத்தைத் தோற்றுஞ் செய்வதுபோல சிவபிரானும் உறவுகோல் நட்டு உணர்வெனுங் கயிற்றினுல் முறுகவாங்கக் கடையும் சிவஞானிகள் அறிவினிடத் தன் விளக்கத்தைத் தோற்றஞ் செய்வன.

"பறித்த நீவினை
பாவிற படுக்கப் போக்
மறைய நின்றுள
மாமணிச் சோதியான்
உறவு கோனட்
டுணர்வு கயிற்றினுல்
முறுக வாங்கிக் கடையமுன்
னிற்குமே." (தேவாரம்)

அனல் ஒன்றே பல விளக்குகளாக விளங்குவதுபோல் சிவமொன்றே பல மூர்த்தங்களாக விளக்கும்.

"ஒன்றவன் றானே
யிரண்டவ னின்னருள்
நின்றனன் மூன்றினுள்
நான்குணர்ந் தானைந்து
வென்றனன் ஆறு
விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தானிருந்
தானுணர்ந் தெட்டே."

(திருமந்திரம்)

அனல் ஏனைய நாற்பூதமாகிய ஆகாயம் அலபூதங்களாகிய மண் புனல் தீ சாறு என்னுமிவைகளில் ஊடுருவி பாய்ந்து நீக்கமறக் கலந்தும், அவைகளைக் கடந்தும், நிற்பதுபோலச் சிவமும் சராசரங்களோடும் நீக்கமறக் கலந்தும் அவைகளைக் கடந்தும் ஒளிர்கின்றது. அவ்வியப்புப் பக்குவமுற்ற ஆன்மாக்களுக்குப் புலனுகாது. அவைகளுக்குச் சிவம் காடாகவும் மலையாகவும் கடலாகவும் தோன்றும், சிவனுமதர்ட்டு அங்கங்கெனுதபடி யாவும் சிவமயமாகத் தோன்றும். இதற்கைய நிலத்தைக் கண்டு இன்புறவேண்டில் காயத்தையே கோயிலாகவும், நன்மனத்தையே தகழியாகவும் மெய்யுணர்வையே நெய்யாகவும், உயிரையே திரியாகவும் கொண்டு ஞானவிளக்கேற்றினுல் ஆணவமகலும். சிவசோதியொளிரும்.

"உடம்பெனு மனையகத்து
ளுள்ளமே தகழியாக
மடம்படு முணர்நெய் யட்டி
யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத் தீயால்
எரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை
கழலடி காணலாமே."

(தேவாரம்)

—சிவநேசன்.

## அரிசி விநியோகக் கட்டுப்பாடு

உங்களுக்குரிய வாராந்த அரிசி 'சப்ளை' அங்கீகரிக்கப்பட்டுள்ள உங்கள் வியாபாரியிடமோ அல்லது அரிசிக்கடையிலோ எப்பொழுதும் உங்களுக்காகச் சேமித்துவைக்கப்பட்டிருக்கும். ஆகையினல் அரிசி விநியோகக் கட்டுப்பாடின் ஆரம்பகாட்களில் ஒரே கூட்டம் கூடி நெருக்கி அதனல் காலதாமத மேற்படுவதைத் தயவுசெய்து தவிர்க்கவேண்டும்.

அரிசிக் கட்டுப்பாடின் ஆரம்பநாட்களில் ஏற்படக்கூடிய அற்ப அசௌகரியங்களைத் தயவுசெய்து மிகைப்படுத்தாதீர்கள். சிற்சில கஷ்டங்கள் ஏற்படவே செய்யும். இருந்தாலும் எவ்வளவு சாத்தியமோ அவ்வளவு சீக்கிரமாகவே இக்கஷ்டங்களை நிவிர்த்திப்பதற்கு எல்லா முயற்சிகளும் எடுத்துக்கொள்ளப்படும்.

### கொழும்பு, கோட்டை, கொலன்னுவை நீங்கலாக இலங்கையின் இதர இடங்கள்

இப்பிராந்தியத்தில் வசிப்பவர்களுக்கு விநியோகிக்கப்பட்ட ஒவ்வொரு கூப்பன் புத்தகத்தினதும் அட்டையின் இரண்டாவது பக்கத்தில் ஒரு அரிசி வியாபாரியின் பெயரும் விலாசமும் எழுதப்பட்டிருக்கிறது. அவர் அதிகாரம் பெற்ற விற்பனையாளரென்று அழைக்கப்படுகிறார். ஏனெனில் அவர் அரிசி விநியோகிப்பதற்கு அரசாங்கத்தாரின் ஏஜண்டாக இருக்கிறார். அங்ஙனமே அவர் பதிவுசெய்யப்பட்டிருக்கிறார்.

2. கூப்பன் புத்தகத்தை அதில் எழுதப்பட்டிருக்கும் பெயருள்ள அதிகாரம்பெற்ற விற்பனையாளரிடம் கொடுத்ததும் அந்த விற்பனையாளர் கூப்பன் புத்தகத்தைக் கொண்டுவந்தவருக்கு அவர் கொடுக்கும் கூப்பன்களுக்குரிய அரிசியைக் கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு விற்பனை செய்வதற்குச் சட்டப்படி கட்டுப்பட்டிருக்கிறார்.

3. தமது வாடிக்கைக்காரருக்கு அரிசி 'சப்ளை' செய்ய வேண்டுமென்பது அரிசி விநியோகக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்ததும் தமது வாடிக்கைக்காரருக்கு சப்ளை செய்வதற்குப் போதுமான அரிசியை அரசாங்கத்தார் மொத்த வியாபாரி தமக்கு சப்ளை செய்வாரென்பதும் யுமென்பதையும் தெரிந்திருக்கின்றார். அதிகாரம்பெற்ற விற்பனையாளர் தமது ஸ்டோரில் யாவரும் பார்க்கக்கூடியதாக வைக்கப்பட்டிருக்கும் அரிசியை கட்டுப்படுத்த பட்ட விலைக்கு விற்குபடியும் கட்டாயப்படுத்தப்படுகிறார்.

4. அரசாங்கத்தார் அதிகாரம் பெறாத விற்பனையாளரல்லாத வியாபாரி

அதிகாரம்பெற்ற விற்பனையாளர் ஒவ்வொருவருக்கும் தெரியும். ஆகையால் இலங்கையில் கூப்பன் புத்தகம் வைத்திருக்கும் அரிசி உபயோகிப்பவர்கள் ஒவ்வொருவரும் தமக்கு அரிசி விற்பதற்குச் சட்டப்படி கட்டாயப்படுத்தப்படும் வியாபாரியொருவர் உண்டென்பதையும் அவரிடமிருந்து தாம் அரிசி வாங்க முடி

உங்கள் வீட்டில் அரிசி இருக்குமேயானல் தயவுசெய்து கட்டுப்பாட்டின் ஆரம்ப வாரங்களில் உங்களுக்குரிய அரிசியைப் பெற்றுக்கொள்ள வேண்டாம்.

பாரியொருவரிடத்தில் தமது கொடுக்கல் வாங்கலை வைத்துக்கொள்ள விரும்பும் அரிசி உபயோகிப்பவர்கள் தமது கூப்பன் புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருக்கும் அதிகாரம் பெற்ற அரிசி விற்பனையாளரல்லாத மற்ற வியாபாரியிடமிருந்து தமது அரிசியைப் பெற்றுக்கொள்ளலாம் இதிலுங்கூட அரிசி உபயோகிப்பவர்கள் கூப்பன்களைத் தமது வியாபாரிகளிடம் ஒப்புவிக்க வேண்டும். இந்த வியாபாரி கூப்பன் புத்தகம் கொண்டு செல்லும் எவருக்கு அரிசி விற்கவேண்டுமென்று சட்டப்படி கட்டுப்பட்டவரல்ல. அதிகாரம் பெற்ற விற்பனையாளரைப் போலல்லாது இந்த வியாபாரிக்கு அரிசி விநியோகக் கட்டுப்பாடு அமுலுக்கு வரும்பொழுது அரசாங்கத்தார் மொத்த வியாபாரியிடமிருந்து அரிசிசப்ளை செய்யப்படமாட்டாது அவர் அப்பொழுது தாம் வைத்திருக்கும் கையிருப்பைக் கொண்டே வியாபாரம் செய்ய வேண்டும். அவர் கூப்பன்களின் பேரில் விற்பனைசெய்தால் அவர் தாம் சேகரித்த கூப்பன்களை அரசாங்கத்தார் மொத்த வியாபாரியிடம் ஒப்படைத்து அதற்குரிய அரிசியைப் பெறுநத் தமது தொழிலை அந்த முறையில் தொடர்ந்து நடத்தலாம்.

### அரசினர் அங்கீகாரம் பெறாத சில்லறைக் கடைக்காரர்களுக்கு அறிவித்தல்

கொழும்பு கோட்டை, கொலன்னுவை ஆகிய பகுதிகளுக்கு வெளியிலுள்ள, அரசாங்கத்தார் அங்கீகாரம் பெறாத சில்லறைக் கடைக்காரர்கள், அரிசிக் கட்டுப்பாடு அமுல் நடத்தப்பட்ட பின்னும் தங்கள் கையிருப்பிலுள்ள அரிசியைத் தொடர்ந்து விற்பனை செய்து வரலாமென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது. பின்னர் அச் சில்லறைக்கடைக்காரர்கள் கூப்பன் புத்தகம் வைத்திருப்பவர்களுக்கு மாத்திரமே அரிசி விற்பனை செய்ய வேண்டும் விற்ற அரிசிக்குரிய கூப்பன்களை அவர்களிடமிருந்து கடைக்காரர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அரிசிவாங்க உரிமையுண்டு. இதற்கு அவர் ஒருவாரத்துக்குரிய இரண்டு கூப்பனகளையும் கடைக்காரரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். வாரத்தின் எந்தநாளிலுமசரி அவருக்கு அந்த இரண்டுபடி அரிசியை பகுதி பகுதியாக வாங்கலாம்.

(2) ஒவ்வொரு கூப்பன் புத்தகத்திலும் எளிதில் கிழிக்கக்கூடிய கூப்பன்கள் 1-வது இலக்கம் முதல் 24வது இலக்கம்வரை இருக்கின்றன. குறிப்பிட்ட ஒரு எண்ணிக்கையுள்ள கூப்பன்தான், குறிப்பிட்ட ஒருவாரத்துக்குரிய அரிசியை வாங்கக்கூடிய கூப்பனாகும். ஒவ்வொரு கூப்பனிலும் குறுக்காக ஒரு கோடு கிழிக்கப்பட்டிருக்கிறது. இதனால் ஒரு கூப்பனை பாதி பாதியாக வெட்டி இரு பாதி கூப்பன்களாக உபயோகிக்க வசதி செய்யப்பட்டிருக்கிறது? ஒரு கூப்பனை அரைக்கூப்பனுக்கு மேல் வேறு சிறிய அளவுக்குப் பிரிக்கமுடியாது. இரண்டு கூப்பன்கள், அதாவது

ஒவ்வொரு வாரத்தின் உபயோகத்திற்காகவும் நான்கு அரைக்கூப்பன்கள் வசதி செய்யப்பட்டிருக்கின்றன.

(3) அரசினர் அங்கீகாரம் பெறாத சில்லறை வியாபாரி தான் விற்ற அரிசிக்கு பெற்றுக்கொண்ட தனது கூப்பன்களை ஒவ்வொருவாரக்கடையிலும் தான் வியாபாரம் செய்யும் பகுதியிலுள்ள அரசாங்க மொத்த வியாபாரியிடம் சமர்ப்பிக்கவேண்டும். அவைகளை சமர்ப்பித்த பின்தான் மொத்தகூப்பனகளுக்குச் சரிசமான அரிசியை அரசாங்க மொத்த வியாபாரியிடமிருந்து வாங்கவேண்டும். அடுத்து ஒருவாரம் முடிவதற்குமுன், குறிப்பிட்ட ஒருவாரத்துக்குரிய கூப்பன்களை அரசாங்க மொத்த வியாபாரியிடம் சமர்ப்பிக்கவில்லை யானல் அச்சில்லறை வியாபாரியால் மொத்த வியாபாரிகள் முழு அரிசியுடைமை மாத்திரம் விற்பனை செய்வார்கள்.

(4) அரிசிக் கட்டுப்பாடு திட்டம் அமுல் நடத்தப்படும் துவக்கத்தில் அரசாங்க அங்கீகாரம் பெறாத சில்லறைக் கடைக்காரர்களுக்கு அரசாங்க மொத்த வியாபாரிகளால் அரிசி சப்ளை செய்யப்படமாட்டாது. கட்டுப்பாடு அமுலுக்கு வரும்பொழுது தனது கையிருப்பில் உள்ள அரிசி வைத்திருந்தால் அதை மாத்திரம் விற்க முடியும்.

தினகரன், 2-2-42.

### லண்டனில் மிகுந்த ஆச்சரியம்

#### மிஸ்றர். எம். சரவணமுத்து விஷயம்

"ஸ்ட்ரெயிட்ஸ் ரைம்ஸ்" பத்திரிகையின் லண்டன் நிருபர் டிசம்பர் ௴ 27ந் திகதி அப்பத்திரிகையில் எழுதுவதாவது:—

"ஸ்ட்ரெயிட்ஸ் எக்கோ" பத்திரிகையின் ஆசிரியரான மிஸ்றர். எம். சரவணமுத்து சத்துரு குண்டு மாரியின் போதும் அப்பத்திரிகையைத் திறமையாக நடத்திவந்த விரத்தை லண்டன் பத்திரிகைகளெல்லாம் பிரமாதமாகப் பிரசுரித்தன. இந்நிலைமையில் அவர் ஜப்பானியரின் நிர்வாகத்தின் கீழ் ஒரு பதவியை ஏற்றுக் கொண்டனரென்ற செய்தி லண்டனில் மிகுந்த ஆச்சரியத்தை உண்டுபண்ணியிருக்கின்றது மிகவும் கொடூரமான நிர்ப்பந்தத்தினுலேயே அவர் பதவி ஏற்றுக்கொண்டிருக்க வேண்டுமென்று பொதுவாகக் கருதப்படுகிறது. ஆயின், இப்பதவியை அவர் நீண்டகாலம் வகிக்கவேண்டி வராதென்றும் விமர்சகர்கள் நம்புகிறார்கள்.

#### உத்தரவின்றிக் கருப்பநீர் இறக்குதல்

"லைசென்ஸ்" இல்லாமல் கருப்பநீர் இறக்குவதற்கு 1939-ம் வருஷம் நவம்பர் ௴ 2ந் திகதி அரசாங்கசபை அனுமதியளிக்கத் தீர்மானித்ததை நீக்கிவிடவேண்டுமென்று உள்நாட்டு மந்திரி ஒரு பிரேரணையைச் சமர்ப்பித்திருக்கிறார். அரசாங்கசபையில் வெள்ளிக்கிழமை யன்று அவர் இதைப் பிரேரித்தார்.

### யா. ஆ. தி. பா. சங்கத்து

## 19-வது வருடாந்த ஆவேதனம்

இந்த ஆவேதனம் 1940 ஆடி முதல் 1941 மார்கழி முடியவுள்ள 18 மாதகாலத்துக்கு உரியதாகும். இக்கால ஆரம்பத்தில் 93 அங்கத்தினர் இருந்தனர் இடையில் நால்வர் காலமாயினர். இப்போதிருப்பவர் 89 இன்மைவர், புதிதாக 31 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர். நீண்டகாலம் அங்கத்தவராயும் உபகாரியதரிசியாகவுமிருந்து உற்றதுணைபுரிந்து இச்சங்கத்தை வளர்த்தவரும், புலவர் குடிப் பிறப்பும் சிறந்த மதிநுட்பமும் விரிந்த நூலறிவும் பெரும் புலமையும் விசித்திர வாக்குவன்மையும் ஒருங்கு வாய்க்கப் பெற்று விளங்கின அறிஞருமாகிய பண்டிதர் வே. மகாலிங்கசிவம் அவர்களை இழந்த துன்புறும் நிர்ப்பாக்கியத்தை இச்சங்கம் இக்காலத்திற் பெறலாயிற்று. அவர்களது பிரிவு பொதுவாகத் தமிழுலகிற்கும் சிறப்பாக இச்சங்கத்திற்கும் நேர்ந்த ஒரு பெரிய நஷ்டமாகும். அவரது அரிய பெரிய கல்வித் தொண்டினைப் பாராட்டி அன்புக் கொடையாக இச்சங்கம் பண்டிதரவர்களது ஞாபகசின்ன நிதிக்கு 25 ரூபா அளிக்கலாயிற்று.

இக்காலத்தில் சங்கத்து நிருவாகசபை ஏழுதரம் கூடிற்று. சபையங்கத்தினர் கூட்டங்களுக்குத் தவறாது வந்து கூட்ட விஷயங்களை நடத்துவதிற் காட்டிய ஆர்வம் பாராட்டற்குரியதென்பது.

இச்சங்கப் பரீட்சைகளுக்குத் தோற்ற விரும்பிப் பாட ஆயத்தஞ் செய்யும் வித்தியார்த்திகளுக்கு உதவி செய்தற் பொருட்டு, பண்டித, பாலபண்டித வகுப்புகள் 1940 ஆடிமுதல் 1941 மாசி வரையும் வாராந்தங்களில் வைத்து நடத்தப்பட்டன. வித்துவான் க. சுப்பையாபிள்ளையவர்கள் போதகாசிரியராயிருந்து இவ்வகுப்புகளை நடத்தினர். எண்மர் பண்டிதரும் 13 பாலபண்டித மாணவரும் கற்றனர்.

1941-ம் ஆண்டுப் பரீட்சைகளுக்கு 147 பேர் தோற்றினர். தமிழுக்கு 145 பேரும், சமஸ்கிருதத்திற்கு 2 பேருமாக, தமிழ்ப் பண்டித பரீட்சைக்கு நால்வர் தோற்றினர். ஒருவர் நூலசித்தி பெற்றனர். ஏனையர் தவறினர். தமிழ்ப் பாலபண்டித பரீட்சைக்கு 84 பேர் தோற்றியவருள் 26 பேர் சித்திபெற்றனர். தமிழ்ப் பிரவேசபரீட்சைக்கு 57 பேர் தோற்றியவருள் 11 பேர் சித்தியெய்தினர். சமஸ்கிருத பாலபண்டித பரீட்சைக்குத் தோற்றிய இருவரும் முதற் பிரிவிற் சித்தியெய்தினர். இவ்வருடப் பரீட்சைகளிற் சித்தியெய்தியவருள் ஒருவரும் போதிய அளவு உயர்தரம் பெறுமையினுல் பரிசில் ஒன்றும் வழங்கப்படவில்லை.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்துச் சரித்திரதுறைப் போராசிரியர் ஸ்ரீ. க. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் யாழ்ப்பாணம் வந்திருந்த காலத்தில் அவரைக் கொண்டு இச்சங்கத்தின் சார்பில் "தமிழ்க்கலை வளர்ச்சி" என்னும் பொருள்பற்றிய ஓர் உபந்நியாசம் 24-4-41 இல் நிகழ்த்துவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்துக் "கலாநிலையம்" என்னும் ஸ்தாபனத்தின் காரணகர்த்தரும் யாழ்ப்பாணத்து இந்துகல்லூரியில் ஓய்வாகவே ஆசிரியருமாகிய ஸ்ரீ. K. கனகரத்தினமவர்கள் மிகுந்த ஆராய்ச்சியும் உழைப்புங் கொண்டு இயற்றிய "மேனாட்டு இந்திய சிற்ப வடிவங்கள்" என்னும் அரிய பெரிய நூலை வெளியிடுவதில் அவர்க்கு உதவியாக, அந்த ஒரு கலையாக்க வேலையும் அரிய முயற்சியுமாயிருந்த நூலை நோக்கி, இருபது பிரதிகளை விலையாகவும் இருநூறு ரூபாவை முற்பணமாகக் கொடுத்து வைக்கப் பட்டதாலாயிற்று.

தமிழ்ப் பீடசாலைகளிற் கீழ்வகுப்புக்களிற் கற்கும் இளம் மாணவர் பாடிப் படித்து ஆடிமகிழ்ந்து பயன் பெறும்படியாக அவர் தரத்துக்கேற்ற இயல்பினவாய இலக்கியப் பாடல்களை ஆக்குவிதற்கும் அங்ஙனம் பாடல்களை ஆக்குவோர்க்கு ரூ 60/-, ரூ 40/-, ரூ 30/- ரூ 20/-, என்னும் அளவினவாக நாலு பரிசில்கள் வழங்குவதற்கும், இச்சங்கம் ஒழுங்கு செய்திருக்கின்றது.

இச்சங்கத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காகிய சாதனங்களுள் ஒன்றாகக் கொள்ளப்பட்டது சங்கச் சார்பில் ஒரு பத்திரிகை (சஞ்சிகை வடிவமாக) நடத்தலென்பது. இதுகாறும் தொடங்கப்படா திருந்த இந்த முயற்சியை இப்போது செய்யத் தொடங்கி 1942 முதலாக "கலாநிதி" என்னும் பெயரிய மும்மாத வெளியீடு ஒன்று 72-80 பக்கங் கொண்டதாகவும், வருடசந்தா 2 ரூ. உடையதாகவும், வெளியிட ஒழுங்குகள் செய்யப்படுதலாயிற்று.

சங்கத்தின் நிலைமையைத் திருத்தி முன்னேற்றமும் உறுதியுமான முறையில் அமைத்தற் பொருட்டுச் சில பிரமாணங்கள் பின்வருமாறு ஆக்கப்பட்டன. அவையாவன:- சங்கப் பரீட்சைகளைச் சித்திரை மாதத்தில் நடத்தி வருதல்; சங்கத்து வரவுசெலவுக் கணக்கு மூன்றுமாதத்துக் கொருமுறை முடித்து நிருவாகசபைக்குச் சமர்ப்பித்தல்; நிருவாகசபையின் அனுமதியைப் பெற்ற செலவு வகைகளுக்கே தனாதிகாரி பணம் அளிக்க வேண்டியது; முன்னதாக அவ்வனுமதியைப் பெறுமல் எந்தச் செலவுக்காவது தனாதிகாரி சங்கப் பணத்தைச் செலவு செய்தலாகாது; அங்கத்தவரிடமிருந்து 1941 முடியவுள்ள காலத்துக்கு வருமதியாகவுள்ள சந்தாப்பணப் பாக்கிகளையெல்லாம் நீக்கிவிட்டு 1942 முதல் கண்டிப்பாக எல்லாரிடமிருந்தும் சந்தாப்பணத்தை அறவு செய்தலென்பது; அந்தந்த ஆண்டுச் சந்தாவைப் பிரமாணப்படி அதாவது முதல் இரண்டுமாதத்தள் செலுத்தி சந்தாப் பாக்கி இலாதிருக்கும் எல்லா அங்கத்தவர்க்கும் சங்கத்தில் வெளியிடப்படும் எல்லா வெளியீடுகளும் (புத்தகங்களுட்பட) இலவசமாக அளிக்கப்படுதல் வேண்டும் என்பனவாம்.

கலைவளர்ச்சிக்கு ஆதாரமான உலகசமாதான நிலைமையை நிறுவுதற்காக இப்போது நடத்தப்படும் இந்த மகாயுத்தத்தில் காலமுறை நேரைப் பேணுதற்காக அமைந்துள்ள ஒரு யுத்த தருமநிதிக்கு ஒருநூறு ரூபா நன்கொடை வழங்கி உதவி செய்யக் கலையாக்கம் கருதி உழைக்கும் இச்சங்கம் தீர்மானித்திருக்கிறது.

இச்சங்கத்தின் உபதலைவர்களுள் ஒருவராக இருந்து துணைபுரியவரும், வித்தியாதிமாணியும், கண்ணிய சீலருமாகிய ஸ்ரீமாக. முதலியார் க. கனகையா அவர்களுக்கு அரசினர் "முதலியார்" என்னும் கண்ணியப் பட்டம் அளித்து அவர்பால் தமக்குள்ள நன்மதிப்பை வெளிப்படுத்தியதை இச்சங்கம் பாராட்டி, அதனுல் இச்சங்கம் அடைந்துள்ள கௌரவத்தை மகிழ்ந்து கொண்டாடலாயிற்று.

### இரு புதிய கே. ஸீ.கள்

இலங்கைக்கு மிஸ்றர் எம். டப்ளியூ. ஹெந்திரிக் டி. சில்வா, திரு. நமசிவாயம் நடராஜா ஆகிய இருவரை கே. ஸீ. பட்டதாரிகளாக நியமிக்கும்படி மன்னர்பிரான் உத்தரவிட்டிருப்பதாகக் குடியேற்ற நாட்டு மந்திரியிடமிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு அறிக்கை கிடைத்திருக்கிறது.

## வேலணைச் சைவப்பிரகாச வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கம்

### ஆண்டு நிறைவுவிழா

மேற்படி பாடசாலை ஸ்தாபகர் சிவபதமெய்திய நாளாகிய சென்ற செவ்வாய்க்கிழமை (27-1-42) அன்று சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் நிறைவுவிழா நிகழ்த்தப் பெற்றது.

பகல் 12 மணியளவில் பாடசாலை மாணவர்க்கும் பெற்றோருக்கும் அறுசுவையோடு கூடிய உண்டி வழங்கப்பட்டது.

இரவு 7 மணியளவில் திரு. செ. கனகசபாபதிப்பிள்ளை அவர்கள் தலைமையில் தேவார பாராயணத்துடன் உபந்நியாசக்கூட்டம் ஆரம்பமாகியது. அவ்வமயம் சைவசித்தாந்தப் பேரறிஞர் திரு. இ. பொன்னையா அவர்கள் (ஏழாலை) சமய முன்னேற்றம் என்னும் பொருள்பற்றியும் திரு. மு. ஞானப்பிரகாசம் அவர்கள் B. A. BSc. (ஆசிரியர் பரமேஸ்வரக்கல்லூரி) சிவனடியார் திருக்கூட்டம் என்னும் பொருள் பற்றியும் அரிய சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். கீழ்வருபவர்கள் அடுத்த ஆண்டின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்:- ஸ்ரீ. கைலாசநாத தேசிகர், திரு. வை. விஜயரத்தினம்.
தலைவர்கள்:- திரு. வே. சுப்பிரமணியம்
உபதலைவர்கள்:- திரு. இ. மருதையனார், திரு. கா. சரவணமுத்து.
காரியதரிசிகள்:- திரு. கா. நடராசா, திரு. க. நமசிவாயம்.
தனதிகாரிகள்:- திரு. மு. சின்னையா, திரு. கா. நமசிவாயன்.
நிருவாகசபை:- திருவாளர்கள் செ. கனகசபாபதிப்பிள்ளை, த. தில்லைநாதர், ச. தாமோதரம்பிள்ளை, ச. சரவணமுத்து, கா. ஆறுமுகம், சு. வேலுப்பிள்ளை, வ. கு. முருகேசபிள்ளை, பொ. கா. நடராசா,

பிறநாட்டுக்காரியதரிசிகள்:- காலி திரு. க. நாகையா, கொழும்பு: திரு க. சண்முகம்பிள்ளை, கண்டி, திரு K. K. சின்னையா கற்றன்: திரு கா. பசுபதிப்பிள்ளை, பண்டாரவளை திரு க. கோபாலபிள்ளை, யாழ்ப்பாணம் திரு. மு. மாணிக்கவாசகர், அம்பலாங்கொடை திரு: ச. இராசையா, சுற்றித் தேவாரபாராயணத்துடன் கூட்டம் நிறைவெய்தியது.

நிருத—

## மலாயாவிலுள்ள இலங்கையரின் செய்தி

### உற்றார் உறவினருக்கு றேடியோவிலறிவிக்க ஏற்பாடு

மலாயாவிலுள்ள இலங்கையர்கள், இலங்கையிலுள்ள தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் றேடியோமூலம் அனுப்புஞ் செய்திகளை இங்கு அஞ்சல் செய்வதுபற்றி ஸ்தல அதிகாரிகள் இப்பொழுது கவனஞ்செலுத்தி வருகின்றார்கள். இதுபற்றிச் சிங்கப்பூர் றேடியோ நிலையத்தாரோடு ஏற்பாடு செய்துகொண்ட பிறகு கூடிய சீக்கிரத்தில் ஓர் உத்தியோக அறிக்கை வெளியிடப்படும்.

#### இந்தியாவில் செய்துள்ள ஏற்பாடு

மலாயாவிலுள்ள இந்தியர்கள் இந்தியாவிலுள்ள தங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அனுப்புஞ் செய்தி தினசரி இரவு 9-30 மணிக்கு (இந்திய நேரம்) சிங்கப்பூர் றேடியோ நிலையத்திலிருந்து 413 மீற்றர்களில் தமிழில் ஒலிபரப்பப்படுவதாகச் சென்னைச் செய்தி போன்று அறிவிக்கின்றது. இந்த றேடியோச் செய்தியைச் சென்னை றேடியோ நிலையம் தினசரி இரவில் 8734 மீற்றர்களில் அஞ்சல் செய்கிறது.

இதே மாதிரி இந்தியாவிலிருந்து பர்மாவிலும் மலாயாவிலுமுள்ள இந்தியர்களுக்குத் தினசரி மாலை 6-15 மணிக்கு டில்லி றேடியோ நிலையத்திலிருந்து 2536 மீற்றர்களிலும் செய்திகள் ஒலிபரப்பப்படுகிறது.

## இலங்கைப் பீரங்கிப்படைப்பிரிவு

### வெளிநாட்டுச் சேவைக்குப் பின் திரும்பியது

இலங்கையிலிருந்து ஒருவருஷத்துக்கு முன்னால், வெளிநாட்டுக்குக் காவல் வேலைக்காகச் சென்ற பீரங்கிப்படையினர் இப்பொழுது இலங்கைக்குத் திரும்பி வந்திருக்கின்றனர். இவர்களுக்குப் பதிலாக மற்றொரு படையினர் இலங்கையிலிருந்து சென்று, இவர்களுடைய பொறுப்பை ஏற்றிருக்கின்றனர்.

இவர்கள் யாவரும் திடகாத்திரமுள்ளவர்களாக இருப்பதோடு அயல்நாட்டு அநுபவ காரணமாக அதிக பயனடைந்திருப்பதாகவும் கூறப்படுகிறது.

## திருச்சி ரேடியோ நிகழ்ச்சி

(† இசைத்தட்டு)

(396 மீ)

### வெள்ளி பிப்ரவரி 5

காலை: 7-30 சிதாரம்பம்† 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி ஸி. எஸ். சாரதாம்பாள் பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 காலை இன்னிசை† 9-00 முடிவு.

1-00 சித்ரகானம்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி ஸி. எஸ். சாரதாம்பாள் பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5-00 காஞ்சீபுரம் ஸ்ரீமதி டி. ராமதிலகம் பாட்டு 5-40 தூரான் இஷரீப் 5-50 கவ்வாலிகள்† 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 திருவாவடுதுறை என். ராஜரத்னம் பிள்ளை நாகஸ்வரம் 7-10 நடைமுதல் நிகழ்ச்சி 7-15 இலக்கியவாசம் 7-30 அறிவிப்புகள், 7-45 தமிழில் செய்திகள் 8-00 திருவாவடுதுறை என். ராஜரத்னம் பிள்ளை நாகஸ்வரம் 8-30 உலக விவகாரங்கள் பி. பி. ஸி. பேச்சு 8-45 காஞ்சீபுரம் டி. ராமதிலகம் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை† 9-55 நாஜிப்பிரசாரம் பி.பி.ஸி. அஞ்சல் 10-00 முடிவு

### சனி பிப்ரவரி 7

காலை: 7-30 தோரம்பம்† 7-40 தமிழில் செய்திகள் 7-50 கே. வி. ராமஸ்வாமி ஐயர் வயலின் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 திரைகானம்† 9-00 முடிவு.

1-00 நக்ஷத்திரங்கள்† 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 கே. வி. ராமஸ்வாமிஐயர் வயலின் 2-00 தமிழில் செய்திகள் 2-05 மன்னார்குடி ஸ்ரீமதி சே. சூர்யாபாய் பாட்டு 2-30 முடிவு.

மாலை: 5-00 மன்னார்குடி ஸ்ரீமதி சே. சூர்யாபாய் பாட்டு 5-40 திருமொழிவிளக்கம் 5-50 பஜனை 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராம நிகழ்ச்சிகள் 6-30 மதராஸில் உள்ளபடி (ரேணுகா பிலிம்ஸ் வாத்யகோஷ்டி) 7-00 மன்னார்குடி ராஜகோபாலபிள்ளை† 7-10 நடைமுதல் நிகழ்ச்சி 7-15 ஜப்பானில் செய்தது 7-30 அறிவிப்புகள் சாஸ்த்தியக் கச்சேரி 7-45 தமிழில் செய்திகள் 8-00 மதராஸில் உள்ளபடி (ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள் பாட்டு) 9-15 மைசூர்சகோதரர்கள் வீணை† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை† 9-55 நாஜிப்பிரசாரம் பி. பி. ஸி. (அஞ்சல்) 10-00 முடிவு.

### ஞாயிறு பிப்ரவரி 8

காலை: 7-30 சிதாரம்பம்† 7-40 தமிழில் செய்திகள் 7-50 ஸ்ரீமதி கமலா, ஸ்ரீமதி நாகம்மா பாட்டு 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 பலர் விருப்பம்† 9-00 முடிவு.

12-00 படஉலகம்† 12-30 ஒலி மலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி கமலா, ஸ்ரீமதி நாகம்மா பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 பிடித்தவைகள் 2-30 முடிவு.

மாலை: 5-00 வடக்கஞ்சேரி எஸ். எஸ். மணிபாகவதர் பாட்டு 5-40 தேவாரத்தை (ரோமன் கத்தோலிக்) 6-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 எம். உதயவர்மராஜா வீணை 7-15 தமிழ் சிப்பாய் 1. சரித்திர விவாதம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 வடக்கஞ்சேரி எஸ். எஸ். மணிபாகவதர் பாட்டு 8-30 எம். உதயவர்மராஜா பாட்டு 9-00 அமெரிக்கப்பிரசாரம் 9-15 வாத்தியம்† 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை† 9-55 நாஜி பிரசாரம் பி. பி. ஸி. அஞ்சல் 10-00 முடிவு.

### திங்கள் பிப்ரவரி 9

காலை: 7-30 சிதாரம்பம் 7-40 தமிழ்செய்திகள் 7-50 தன்னக்குடி வி. வெங்கடராமையர் புல்லாங்குழல் 8-15 ஆங்கிலத்தில் செய்திகள் 8-25 படகானங்களிலிருந்து 9-00 முடிவு.

1-00 காரியவைகள் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-35 ஸ்ரீமதி டி. எம். ஹம்ஸவல்லி பாட்டு 2-00 தமிழில் செய்திகள் 2-05 கல்வி ஒலிபரப்பு 2-30 முடிவு.

மாலை: 5-00 தன்னக்குடி வி. வெங்கடராமையர் புல்லாங்குழல் 5-45 இசைப்பயிற்சி 5-00 ஆங்கிலத்தில் செய்திகள் 6-05 கிராமநிகழ்ச்சிகள் 6-30 ஸ்ரீமதி டி. எம். ஹம்ஸவல்லி பாட்டு 7-10 நடைமுதல் நிகழ்ச்சி 7-15 செய்திச்சித்ரம் 7-30 அறிவிப்புகள் 7-45 தமிழில் செய்திகள் 8-00 எம். கே. தியாகராஜபாகவதர் பாட்டு 9-20 ஆங்கிலத்தில் செய்திகள் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-45 இடைவேளை† 9-55 நாஜிப்பிரசாரம் பி.பி.ஸி. அஞ்சல் 10-00 முடிவு.

## புகைரதப் பிரயாணிகளின் சத்தியாக்கிரஹம்

### வெருவலையில் நடந்தசம்பவம்

வெருவலை, பெப் 1

நேற்றுப் பிற்பகல் அநுராதபுரத்துக்குச் சென்ற மெயில் புகைரதம் வெருவலையில் வந்து நின்றதும் அதற்குமேல் அது அநுராதபுரத்துக்குப் போகாதென்று அறிவிக்கப்பட்டதும், புகைரதத்திலிருந்த பிரயாணிகள் இறங்காமல் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்தனர்.

புகைரதக் கால அட்டவணையின்படி இந்தப் புகைரதம் வழக்கமாக 12-13 மணிக்கு வெருவலைக்கு வந்து சேரும். ஆயின், அது நேற்று ஒருமணிநேரம் தாமதித்து வந்தது. வழக்கப்படி இந்தப் புகைரதம் அநுராதபுரத்திலிருந்து 12-52 க்குக் கொழும்புக்குத் திரும்ப வேண்டியதாகும். ஆகவே, புகைரதத் திணைக்களத்தின் கொண்ட்ரோலரின் உத்தரவுப்படி வெருவலைப் புகைரத நிலையத் தலைவர் புகைரதத்திலிருந்த அநுராதபுரப் பிரயாணிகளையும் வெருவலையில் இறங்கச் சொன்னார்.

அநுராதபுரத்துக்குப் போகவேண்டியவர்கள் 25 பேர் அந்தப் புகைரதத்திலிருந்து இறங்க மறுத்துவிட்டனர். தங்களை அநுராதபுரத்தில் கொண்டு போய்ச் சேர்க்காமல் புகைரதம் கொழும்புக்குத் திரும்புமானால், அபாயச்சங்கிலியை இழுத்துப் புகைரதத்தை நிறுத்தி விடுவதாகவும் அவர்கள் பயமுறுத்தினர்.

சிறிது நேரத்திற்குப் பின்னர் புகைரத நிலையத் தலைவர் அந்தப் புகைரதத்தை அநுராதபுரத்துக்கு விடும்படி உத்தரவிட்டார். இதனால், நேற்றுப் பிற்பகலில் அநுராதபுரத்திலிருந்து கொழும்புக்கு மெயில் புகைரதம் விடப்படவில்லை.

## பம்பாய்த் தியேட்டரிற்குழப்பம்

பம்பாய், ஜன, 27—

பம்பாயில் உள்ள ஒரு சினிமாவில் இந்தியப்படக்காட்சி நடக்கும்போது அதில் ஆக்ஷேபகரமான சில அம்சங்களிருப்பதாகச் சொல்லிக் காட்சிகாண வந்திருந்தவர்களிற் சிலர் திரைமீது கல்லை எறிந்தனர். சினிமா மனேஜரான பார்ஸி வகுப்பினர் ஒருவரும் மற்றொருவரும் அவர்களைச் சமாதானப்படுத்த முயன்றனர். அப்போது அவர்களிருவரும் கத்தியாற் குத்தப்பட்டனர். அவர்களை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார்கள். இதற்குள் பொலீஸார் அங்கு வந்து 20 பேரைக் கைது செய்தனர். பிறகு பொலீஸார் பாதுகாவலோடு காட்சி தொடர்ந்து நடைபெற்றது.

## பகல்பூரில் வகுப்புக் கலவரம்

### இருவர் இறந்தனர் 70 பேருக்குக் காயம்

பாட்னா, ஜன, 29—

நேற்றுமாலை பகல்பூரில் நடந்த வகுப்புக் கலவரத்தில் இருவர் கொல்லப்பட்டதாகவும், 70 காயமடைந்ததாகவும் தகவல் எட்டுகிறது.

மற்றவிடங்களில் மொஹரம் சம்பந்த கலவரமுமின்றி நடந்து முடிந்தது; பொலிஸ் பந்தோபஸ்து எல்லாம் பலமாக விருந்தது

## ஸ்ரீ ஜோஷியின் தீர்மானம்

### பிப்ரவரி 12-ந் தேதி விவாதம்

புதிய டில்லி, ஜன, 29—

இந்திய சட்டசபையின் பொது கூட்டத்தில் ஸபையாலோசனை உத்தியோகப் பற்றற்ற தீர்மானம் எதுவுமில்லை யாதலால் மத்தியில் தேசிய அரசாங்கம் வேண்டுமென வற்புறுத்தி ஸ்ரீ. என். எம். ஜோஷி கொண்டுவந்துள்ள தீர்மானம் பிப்ரவரி 12-ந் தேதி முதல் முதலாக விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்ற தீர்மான விவரம் ஏற்கெனவே வெளியாகியிருக்கிறது.

## புகை வண்டியில் பிரேதம்

கராச்சி, ஜன, 28—

சிந்து புகைரதம் பொலிஸ் சூப்பரிண்டெண்டு சால்பக்வர் தனிலாசப் வாஸ்வானி வடசிந்து பிரதேசத்தில் குற்றங்களைப் பற்றி விசாரிக்கத் தனியாக நியமிக்கப்பட்டார். மகந்த் ஸ்டேஷனில் புகைவண்டியில் அவரது பிரேதம் இன்று காணப்பட்டது. அப்பிரேதம் கொண்டுவரப்பட்டது.


சி. எம். சாமி
மன்மதக் குளிகை

மிகுந்த பலத்தையும் ரத்த விருத்தியையும் உண்டாக்கும்

அநேக பரிசுகள் பெற்று, உலகெங்கும் புகழப்பட்டது;
இதற்கு நிகரான ஔஷதம் வேறில்லை
ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம்

இழந்த சக்தியும் பலமும் திரும்ப வரும்; நல்ல ஜீரணம், ரத்த விருத்தி, சரீரக்கட்டு, தேகபுஷ்டி, வாலிபசக்தி, இவற்றைத்தரவல்லது. எவ்வித பலஹீனம், இடுப்புவலி, மேஹரோகங்கள் தீரும். ஒரு முறை பரீட்சித்தவர்களுக்கு இதன் அருந்தன்மை விளங்கும். சேட்லாக்கிற்கு எழுதுங்கள்,

அர்சியாட்டார் முன்பண மனுப்ப வேண்டும்.

60 குளிகை ரூபா 5 — 20 குளிகை ரூபா 2

தலைமை ஆபீஸ்:-
மலையப்பசாமி வைத்தியசாலை பழனி

கிளை ஆபீஸ்:-
1 மலையப்பசாமி வைத்தியசாலை சிந்தாதிரிப்பேட்டை மதராஸ்
2 மலையப்பசாமி வைத்தியசாலை 143 செட்டியார்தெரு கொழும்பு
3 மலையப்பசாமி வைத்தியசாலை வண்ணார்பண்ணை கதிரேசன் கோவிலடி யாழ்ப்பாணம்

Y 221 31-3-430-3-41

திருநெல்வேலி ஒற்றுமை நிதி (வரையறாது)
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூபா 500,000.
ஒன்று 25 சதமாக 80 மாதங்கள் செலுத்தி ரூபா 25ம் ஆதாயமும் பெறலாம்
வங்கித்தொழிலும் வியாபாரமும் இலாபகரமாய் நடக்கின்றன.
தேசியகருமங்களை வளர்ப்பதால் சுயேச்சைபெறமுடியும்.
இலகுவான முறையில் இறுக்கக்கூடிய கடன்கள் கொடுக்கிறோம்.
உயர்ந்த வட்டி விகிதங்களோடு தவணைக்கும் நிபந்தமாயும், சம்பாத்தியத்திலும், கடைக்கணக்கிலும் பணம் ஏற்றுக்கொள்வோம்.
பங்குகளுக்கு முந்துங்கள்!
வ. சோமசுந்தரம்,
காரியாதிகாரி.
(வி) (Y. 164. 1-11-41 to 31-10-42)

புதிய [1942] பாடத்திட்டத்திற்கு இயைந்த
தமிழ் இலக்கிய வாசகங்கள்
5-ம் 6-ம் 7-ம் வகுப்புசட்குரியவை
1 இலக்கியவாசகம் முதற்பாகம் சதம் 15
2 ,, இரண்டாம்பாகம் சதம் 20
3 ,, மூன்றாம் பாகம் சதம் 25
செந்தமிழ்க் கருவூலம்
திரு. வித்துவான் ந. சுப்பையபிள்ளை அவர்களால் இயற்றப்பட்ட உரையுடன் கூடியது. J. S. C. பரீட்சைக்கு ஆதாரமாக ஆறும் ஏழாம் தரங்களில் மாணவர்களுக்குச் செய்யுளிலக்கிய அறிவை வளர்த்தற்கேற்ற பாடபுத்தகமாகக் கொள்ளத்தக்கது.
மனேஜர்
யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை.

குறைந்தவிலை! குறைந்தவிலை!!
தற்போது
இலங்கை இந்தியா முழுவதும் பெயர்பெற்ற
* பவுண் மார்க் ஓடுகள் *
திறமான "பவுண்மார்க்" ஓடுகள்
தற்சமயம் யாழ்ப்பாணம் ரேகில் வரவிருப்பதால் ஏறக்குறைய ஒருவாரம்வரையில் மேற்படி ரேகில்
சகாயமான விலைக்குப்
பெற்றுக் கொள்ளலாம்
தேவையானவர்கள் முந்திரயே ஆடர் அனுப்ப வேண்டியது
சி. வீரகத்திப்பிள்ளை அன்ட்சன்ஸ்
[Phone No 93] யாழ்ப்பாணம்
Y 164—

வடமாகாண
ஆசிரியர் சகாயநிதிச் சங்கம்
1933-ம் ஆண்டு தொடக்கப் பெற்றது
அரசினரால் பதிவு செய்யப்பட்டது
அங்கத்தவர்கட்டணப்பணம் மாத்திரம் 45000 ரூபாவிற்குமேலிருக்கிறது
30 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு ஆசிரியரும் அங்கத்தினராய்ச் சேரலாம். மாதக்கட்டண விகிதம்:-
1-ம் வகுப்பு ரூ. 4-00 2-ம் வகுப்பு ரூ. 2-00
3-ம் வகுப்பு ரூ. 1-00
தேவையான விபரம் எம்மிடம் அறிந்து கொள்ளலாம்
ச. பொ. இராசையா
காரியதரிசி,
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வண்ணார்பண்ணை — வடமாகாண ஆசிரியர்சகாயநிதிச்சங்கம்
H 145 1-12-41—31-5-42

வாதம், சலரோகம், குன்மம், முதலிய
எந்த
வியாதியானலும்
உத்திரவாதத்துடன் குணப்படுத்தப்படும்
சுகாதார மாஜி மந்திரி கனம் Dr. T. S. S. ராஜன்
ஸ்ரீ. S. சத்தியமூர்த்தி M. L. A.
Dr. C. சபாபதி, M. B. C. M. M. R. C. S. L. R. C. P.
முதலிய பலரால் புகழ்ந்து நற்சாட்சிபத்திரம் அளிக்கப்பட்டன. நேரில் அல்லது தபால்மூலமாய்ச் சிகிச்சை பெறவும்
Dr. K. S. Paripurnananda
Regd. MEDICAL Practitioner
R. K. S. Vaidyasala
Palaly Rd. Kandarmadam
JAFFNA
Q 129 6-11-41—5-2-42


## தோட்டப் பகுதிகளிற் கூட்டுறவுக் கடைகள்

### சட்டம் கொண்டுவர உத்தேசம்

தோட்டப்பகுதிகளில் தனிப்பட்டவர்கள் கடை வைத்திருப்பதைத் தடுக்கும் பிரச்னை பற்றிப் பரிசீலனை செய்வதற்காகத் தொழில் நிர்வாகசபையும் விவசாய நிர்வாகசபையும் சேர்ந்த ஒரு கூட்டம் சென்ற வெள்ளிக்கிழமை காலை நடைபெற விருந்தது. ஆயின் மந்திரிசபைக் கூட்டம் காரணமாகக் குறித்த நிர்வாகசபைகளின் கூட்டம் நடைபெறவில்லை.

தன்சாணிகளின் கடைகளிலேயே சாமான்கள் வாங்கவேண்டுமென்று தொழிலாளர்களுக்கு நிர்ப்பந்தம் ஏற்படுவதைத் தடுப்பதற்காகத் தோட்டப்பகுதிகளிற் கூட்டுறவுச் சங்கக் கடைகளைத் தவிர வேறு கடைகளை நடத்தக் கூடாதென்று தடைசெய்யும் ஒரு சட்டத்தை ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாகக் கூட்டுறவுச் சங்க றிஜிஸ்ட்ரார் ஒரு மகஜரைச் சமர்ப்பித்திருக்கிறார்.


ஆறுமுகநாவலர் பதிப்புப் புத்தகங்கள்
ஆறுமுகநாவலரவர்கள் பதிப்பு நூல்களை இலங்கையில் விற்பனை செய்வதற்கு வே. கந்தசாமி என்பவரைச் "சோல் ஏஜன்ற்" ஆக நியமித்திருக்கிறோம், மேற்குறித்த வியாபார ஸ்தலம் இந்துசாதன ஆபீசிற்கு முன்னுள்ளது. இன்று தொடங்கி நாவலரவர்கள் பதிப்பு நூல்களுக்குரிய ஓடர்களை இந்தியாவுக்கனுப்பாது கீழ்க்காணும் விலாசமுள்ள புத்தகசாலைக்கே அனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்,
விலாசம்:-
V. Kandasamy
Jaffna Tamil Book Depot
VANNARPONNAI.
Q 134 17. 11. 41 16. 2. 42

விசேஷ விளம்பரம்
இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மெனி, பிரான்சு, முதலிய, தேசங்களின் பிரதான ரேகைசாஸ்த்திர நூல்களின் பிரமாணங்களைக் கொண்டு உங்கள் கைரேகையிலிருந்து எல்லா விதமான பலன்களையும் சொல்லக்கூடும்,
ஸ்புடம் தசவர்க்கம் முதலிய கணித வகைகளும் மகாதெசை புத்தி பலனும் அடங்கிய ஜாதகம் ரூபா 5 ஷ விஷயங்களுடன் கோசரபலன் காலசக்கரபலன், பாவபலன், முதலியன அடங்கிய பெரிய ஜாதகம் எழுத ரூபா 10/—
ஜோசியர், நா. சின்னத்துரை
கைதடி வடக்கு, கைதடி.
Y 67 20-7-41—19-7-42

பிரிட்டனிலிருந்து சாமான்கள்!
புதிதாகக் கப்பலில் வருகின்றன...
மூக்குக் கண்ணாடி பிறேம்கள், கண்ணாடிகள்,
பல்கட்டுவதற்குத் தேவையான சாமான்கள்
செயற்கைப்பற்கள்
பிளாஸ்டர் ஒவ் பாரிஸ் இறாத்தல் ஒன்று ரூ. 1-50
"டூரெக்ஸ்" கிளினிக்கல் தேமோமீற்றர்கள் (சரியானவை நீடித்தகாலம் உபயோகிக்கத் தகுந்தவை என்பனவற்றிற்கு உத்தரவாதம்)
ஒன்று ரூ. 2-50
பத்திராஜு & சன்,
3-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்
Q 115 23-1-42—22-4-42

புத்தக விளம்பரம்
எஸ். எஸ். ஸி பாடப் புத்தகங்கள் 1943

| | ரூ. | ச. |
|---|---|---|
| 1 அறிவுரை மாலை | | 75 |
| 2 அருச்சுனன் தீர்த்தயாத்திரைச்சருக்கம் (தமிழுரை ஆங்கில மொழிபெயர்ப்புடன்) | | 75 |
| 3 திருக்குறள் அதி. 1—10 கையடைப்படலம் (உரை) சங்கநூல் கட்டுரைக் குறிப்பு | | 75 |
| 1 தமிழர் சரித்திரம் | 2 | 00 |
| 2 தமிழகம் | 2 | 25 |
| 3 புறப்பொருள் வசனம் | 1 | 00 |
| 4 பரிபாடல் வசனம் | 1 | 00 |

எல்லாப் பெரிய புத்தகவியாபாரிகளிடமும் கிடைக்கும்
Q 175—27-1-42—26-4-42 (வி.)

தி மலாயன் டிரேடிங் கொம்பனி
(சிங்கப்பூர்க் கொம்பனி)
இரும்பு, பித்தளைச்சாமான்கள், சிமேந்துவகைகள் விற்பனவு செய்வோர் பெரியகடை, யாழ்ப்பாணம்.
"புறோப்ரைட்டர்" K. A. இரத்தினசிங்கம்
Y 19. 4-3-41—3-3-42



விளம்பர விகிதம்
முதல்முறைக்கு
ஒரு அங்குலம் ரூபா 10-00 அரைக்கால் ரூபா 5-00
அரை அங்குலம் ரூபா 4-00 ஒரு அங்குலம் ரூபா 3-00
அடுத்த முறைகட்கு மேற்படி விகிதங்களிற் பாதி
[illegible]

பத்திரக்கிரயம்
வருஷம் ஒன்றுக்கு யாழ்ப்பாணப்பட்டினத்தில் தமிழ் ரூபா 5-00 இங்கிலீஷ் தமிழும் 9-00
இலங்கை இந்தியா 8-00 இங்கிலீஷ் தமிழும் 12-00
பிறதேசம் பகுதி 9-00 இங்கிலீஷ் தமிழும் 13-00
தனிப்பிரதி சதம் 5
முற்பணமாக அனுப்பப்படல் வேண்டும்


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ்சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலகமெல்லாம்.

Printed and Published by S. ADCHALINGAM residing at Vannarponnai East, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabai Jaffna, at their Press, the Saiva PrakasaPress Vannarponnai, Jaffna, on Thursday February 5th 1942.